**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**,முன்னிலை:–திருமதி.S.சப்னா, B.B.M.,L.L.M**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் வியாழக்கிழமை**
**E–Crl.M.P.No.326/2025**

ஜெயசுதா (வயது 44),
க/பெ. கணேசன்,
க.எண்.5/186 கள்ளிமேடு,
கணபதிபாளையம், பல்லடம் தாலுக்கா,
திருப்பூர் மாவட்டம். ..... மனுதாரர்/புகார்தாரர்

/ எதிர் /

1) அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
பல்லடம் காவல்நிலையம்,
திருப்பூர் மாவட்டம்.

2) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

இம்மனுவானது பாகுபாச பிரிவு 175(3)ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2)மனுதாரர் பல்லடம் ஸ்ரீ பானு ஜீவல்லரி என்ற நிறுவனத்தின் மனுதாரருக்கு ஏலச்சீட்டு போடும் வகையில் வரவு செலவு இருந்து வந்துள்ள நிலையில் கடந்த 30.06.2025 ம் தேதி வரவு செலவ தொகைகளை செலுத்தி மனுதாரர் ரூ. 8,26,000/–ம் செலுத்தி நகை வாங்கி வந்துள்ளதாகவும் பல்லடம் ஸ்ரீ பானு ஜீவல்லரி என்ற நிறுவனத்தில் நகைகள் எடுத்த வகையில் மனுதாரர் எவ்வித பாக்கி தொகையம் நிலுவையில் வைக்கவில்லை.

3)மனுதாரர் கடந்த 19.12.2024 ம் தேதி முதல் 10.06.2025 ம் தேதி வரை மாதம் ரூ.1,25,000/–ம் என்ற இரண்டு சீட்டுகள் மாதாமாதம் ரூ.2,50,000/–ம் செலுத்தி வந்ததாகவம் இந்த இரண்டு சீட்டுகளில் ஒரு சீட்டு தொகையை மட்டும் எடுத்து உள்ளார் மீதமுள்ள ஒரு சீட்டு தொகையை மனுதாரரால் தொடர்ந்து செலுத்த

இயலாததால் ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளரை நேரில் அணுகி கேட்டதற்கு மேற்படி உரிமையாளர் சீட்டு தொகையை திருப்பி தர இயலாது என்றும் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்றும் மனுதாரரிடமும் மனுதாரர் கணவரிடமும் கூறி அனுப்பியுள்ளார்கள் இதனால் மனுதாரர் மற்றும் அவரது கணவர் மிகுந்த அச்சத்திலும் மனவேதனையிலும் இருந்து வந்துள்ளனர்.

4)இந்நிலையில் 10.07.2025ம் தேதி அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் மனுதாரர் குடும்பத்துடன் வீட்டில் இருந்தபோது ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் அவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர்களுடன் மனுதாரர் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து மனுதாரர் கணவரை தாக்கிவிட்டு மனுதாரரை தகாத வார்த்தைகளால் பேசிவிட்டு சீட்டு பணம் கேட்டு கடைப்பக்கம் வந்தால் மனுதாரரையம் மனுதாரர் குடும்பத்தையும் கொளுத்தி விடுவோம் என்று மிரட்டியள்ளனர். மேலும் மனுதாரர் கணவரையும், மனுதாரரையும் குடும்பத்தையும் ஹவுஸ் அரஸ்ட் செய்து வைத்து சுமார் நள்ளிரவு 12.00 மணிக்கு தான் மனுதாரர் வீட்டிலிருந்து சென்று விட்டார்கள்.

5)மேற்படி ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் அவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர்களின் செயலால் மனுதாரர் மிகுந்த அச்சத்துடன் இரவு முழுவதும் தூங்காமல் அவர்கள் மிரட்டியதை நினைத்து உடல்நிலை சரியில்லாமல் கடந்த 11.07.2025ம் தேதி பல்லடம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

6)பல்லடம் காவல்நிலைய காவலர் கடந்த 11.07.2025ம் தேதி மனுதாரரிடம் எழுத்து பூர்வமான புகாரை பெற்று கடந்த 12.07.2025ம் தேதி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த மனுதாரரை காவல் சார் ஆய்வாளர் அவர்களும் விசாரணை செய்தும், பல்லடம் அரசு மருத்துவமனையில் கடந்த 15.07.2025ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தும் பின் மனுதாரரை மேற்படி மருத்துவ மனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் கடந்த 15.07.2025ம் தேதி திருப்பூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்ததாகவும் மனுதாரர் கடந்த 15.07.2025ம் தேதி முதல் 19.07.2025ம் தேதி வரை திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையி லிருந்ததாகவும் மனுதாரர் புகார் சம்மந்தமாக மனுதாரரையோ அல்லது எதிரிகளையோ எவ்வித விசாரணையும் செய்யாமல் ஒருதலைபட்சமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் எதிர்மனுதாரர் காவல்துறையினர் இருந்து வந்ததாகவும் இதனால் மனுதாரர் மிகுந்த மனவேதனைக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகி உள்ளார்.

7)இந்நிலையில் ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றுமஅவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர்கள் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் அவர்கள் மீது எதிர்மனுதாரர் காவல் துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் ஒருதலைபட்சமாக இருந்து வரும் கடந்த 08.08.2025ம் தேதி திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் பல்லடம் துணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் மனு அனுப்பியதாகவும் மேற்படி மனுதாரர் அனுப்பிய மனுவை கடந்த 09.08.2025ம் தேதி பெற்ற திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் பல்லடம் துணை மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களும் நாளது தேதிவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

8)எனவே, இந்நீதிமன்றம் 10.07.2025ம் தேதி அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் மனுதாரர் குடும்பத்துடன் வீட்டில் இருந்தபோது ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் அவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர்களுடன் மனுதாரர் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து மனுதாரர் கணவரை தாக்கிவிட்டு மனுதாரரை தகாத வார்த்தைகளால் பேசி விட்டு சீட்டு பணம் கேட்டு கடைப்பக்கம் வந்தால் மனுதாரரையும் மனுதாரர் குடும்பத்தையும் கொளுத்தி விடுவோம் என்று மிரட்டியும், மனுதாரர் கணவரையும், மனுதாரரையும், குடும்பத்தையும் ஹவுஸ் அரஸ்ட் செய்து வைத்து சுமார் நள்ளிரவு 12.00 மணிக்கு மேல் மனுதாரர் வீட்டிலிருந்து சென்ற எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 115(2), 126(2),331, 351(2), 79 ஆகிய சட்டப்பிரிவுகள் மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள்

துன்புறுத்துதல் தடைச்சட்டத்தின் கீழும் எதிர்மனுதாரர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஸ்ரீ பானு ஜூவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் அவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாது அடையாளம் தெரிந்த நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டும் என்று கூறியுள்ளார்.

9)மாண்புமிகு உச்சநீதிமன்றம் லலிதாகுமாரி எதிர் உத்திரப்பிரதேச மாநில அரசு 2014(2) SCC 1 என்ற வழக்கில் குடும்ப, திருமண வழக்குகள், உரிமையியல் வழக்குகள், 3 மாத காலத்திற்கு மேலாக காலதாமதமான வழக்குகள் ஆகியவற்றில் முன்விசாரணை மேற்கொண்டு அதன்பேரில் புலன் கொள்ளத்தக்க குற்றம் ஏற்பட்டிருக்குமாயின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்திரவிடப் பட்டுள்ளது.

10)மேற்படி மனுவை பரிசீலனை செய்ததில் கடந்த 10.07.2025 ம் தேதி அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் மனுதாரர் குடும்பத்துடன் வீட்டில் இருந்தபோது ஸ்ரீ பானு ஜீவல்லரி உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் அவரது மகன் சேதுபதி, விக்னேஷ், பாரதி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த நபர்களுடன் மனுதாரர் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து மனுதாரர் கணவரை தாக்கிவிட்டு மனுதாரரை தகாத வார்த்தைகளால் பேசி விட்டு சீட்டு பணம் கேட்டு கடைப் பக்கம் வந்தால் மனுதாரரையும் மனுதாரர் குடும்பத்தையும் கொளுத்தி விடுவோம் என்று மிரட்டியும், மனுதாரர் கணவரையும், மனுதாரரையும், குடும்பத்தையும் ஹவுஸ் அரஸ்ட் செய்து வைத்து சுமார் நள்ளிரவு12.00 மணிக்கு மேல்மனுதாரர் வீட்டிலிருந்து சென்ற எதிரிகள் சென்றதாகவும் இதுகுறித்து கடந்த 08.08.2025 ம் தேதி திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் பல்லடம் துணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் மனு அனுப்பியதாகவும் மேற்படி மனுதாரர் அனுப்பிய மனுவை கடந்த 09.08.2025 ம் தேதி பெற்ற திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் பல்லடம் துணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் பெற்றுக் கொண்டு நாளது தேதிவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மனுதாரர் புகாரரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

11)ஆகவே மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி மேற்படி மனுவில் கூறப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பாக புலன் கொள்ளத்தக்க வழக்கு உள்ளதா என்று பல்லடம், காவல்ஆய்வாளர் அவர்கள் முதல் நிலை விசாரணை (Preliminary Enquiry) செய்ய உத்தரவிடப்படுகிறது. ஒருவேளை, விசாரணையின் பின்பு விசாரணை அதிகாரி புகாரை சம்பவம் தவறானது (Mistake of Fact) அல்லது உரிமையியல் தன்மையுடையது என்று முடிவு செய்தால் முடிவு செய்த அறிக்கையை (ClosureReport) மனுதாரருக்கு கொடுத்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க உத்தரவிடப் படுகிறது. ஒருவேளை, விசாரணையில் புலன்கொள்ளத்தக்க(Cognizanceoffences) குற்றம் இருக்குமாயின் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 ன் அத்தியாயம் 12 ன் படி செயல்பட்டு குறித்த காலத்திற்குள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

12)மேற்படி, உத்தரவின்படி காவல்அதிகாரி விசாரணை மேற்கொள்ளாமல் இருந்தால் பாதிக்கப்பட்ட மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு சுகேசன் டிரான்ஸ் போர்ட் பிரைவேட் லிமிடெட் ..எதிர்.. காவல் ஆய்வாளர் 2016 (5) CTC 577 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.04.02 21:12:32 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

<u>மனுதாரர் தரப்பு ஆவணங்கள்</u>

ஆவண எண்.1 – 11.07.2025 ம் தேதி புகார் மனு நகல்

ஆவண எண்.2 – 15.07.2025 ம் தேதி பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி நகல்

ஆவண எண்.3– 19.07.2025 ம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி நகல்

ஆவண எண். 4 – 08.08.2025 ம் தேதி உயர்திரு திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் பல்லடம் சரக துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய மனு நகல்

ஆவண எண். 5 – 08.08.2025 ம் தேதி உயர்திரு திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் பல்லடம் சரக துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை நகல்

ஆவண எண். 6 – புகார் மனு ரசீது நகல்

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.04.02 21:12:41 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.